தொழில் நுட்பக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர். இரா.பழனிசாமி, இ.ஆ.ப.,
தொழில் நுட்பக் கல்வி ஆணையர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி,
சென்னை – 600 025

பெறுநர்

கல்லூரி கல்வி இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்ககம்,
சென்னை –06

**கடித எண்.29494 / சிடபிள்யூ8 / 2018 நாள் 14.02.2018**

ஐயா,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – சீர்காழி, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 2017–18 ஆம் கல்வி ஆண்டில் புதியதாக துவங்க அரசாணை வெளியிடப்பட்டமை – கல்லூரிக்கான கட்டிடம் கட்டுவதற்கு தடையில்லாச் சான்று வழங்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை ) எண்.199 உயர்கல்வி (ஜி1) துறை நாள் 24.7.2017
2. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை கடிதம் எண் ந.க.எண்.02658/கியூ2/2018, நாள் 27.1.2018 மற்றும் 8.2.2018.
3. சீனிவாசா சுப்புராயா பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர், கடித எண் 164/அ5/2018, நாள் 12.2.2018.

------

பார்வையில் (2)–ல் காணும் தங்கள் கடிதத்தில், 2017–18 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக துவங்கப்பட்ட சீர்காழி பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தற்போது சீனிவாச சுப்புராய பாலிடெக்னிக் கல்லூரியில் தற்காலிக கட்டிடத்தில் இயங்கி வருவதாக தெரிவித்து அவ்வளாகத்தில் கலைக்கல்லூரிக்கென 4.26.0 ஹெக்டேர் நிலத்தில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பாக சீனிவாச சுப்புராய பாலிடெக்னிக் கல்லூரி நாகப்பட்டினம் மாவட்டத்தில், சீர்காழி வட்டம் 9, கோபால சமுத்திரம் கிராமத்தில் புல எண்கள் **326/1, 328/1B, 328/2B, 328/3B, 328/5** –ல் ரயத்து புஞ்சை என்ற வகைப்பாடுடைய ஸ்தலத்தில் **5.21.5** ஹெக்டேர் பரப்பு திட்ட விஸ்தீர்ணம் உடையதாக சீர்காழி வட்டாட்சியர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய நிலத்தில் சீர்காழி பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட புல எண் **326/1–ல் 0.25.5; 328/1B–ல் 2.65.0**; 328/2B-ல் 0.10.5; **328/3B–ல்** 1.05.0 மற்றும் **328/5 –ல் 0.20.0** என மொத்தம் **4.26.0** ஹெக்டேர் நிலப்பரப்பை ஒதுக்கீடு செய்ய பரிசீலனை செய்யலாம் என முதல்வர் பார்வை (3)-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே சீர்காழி பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட ஏதுவாக சீனிவாச சுப்புராய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் **4.26.0** ஹெக்டேர் நிலத்தினை நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக தடையில்லாச் சான்றும், முன் நுழைவு அனுமதியும் வழங்கப்படுகிறது. மேலும், அவ்வாறு நிலம் வழங்கும் பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தொகையினை தொழில் நுட்பக் கல்வித் துறைக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மை சான்று வழங்கப்படுகிறது.

கலைக்கல்லூரிக்கென தெரிவு செய்யப்பட்ட இடத்தினை குறிப்பிட்டு செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வரைபடம் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

16/2/18

தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக

நகல் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

நகல் முதல்வர் சீனிவாச சுப்புராய பாலிடெக்னிக் கல்லூரி , புத்தூர், சீர்காழி அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

நகல் செயற்பொறியாளர், பொ.ப.து , தொழில் நுட்பக் கல்வி கோட்டம் , தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

நகல் முதன்மைசெயலாளர், உயர்கல்வித்துறை, தலைமை செயலகம், சென்னை–09, அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.